செ.வெளி: 542/2016 பத்திரிக்கை செய்தி நாள்: 29.11.2016

திருவண்ணாமலை அருள்மிகு ஸ்ரீஅருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் கார்த்திகை மகாதீபத்திருவிழா 12.12.2016 அன்று நடைபெற உள்ளது. தீபத்திருவிழாவினை காண்பதற்கு அதிகமான பக்தர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் வருவார்கள் என்பதால் பக்தர்களின் வசதிக்காக விழுப்புரம் மற்றும் சகோதர போக்குவரத்துக்கழகங்களில் இருந்து 11.12.2016 முதல் 13.12.2016 வரை திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. மேலும் திருவண்ணாமலை நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க 12 தற்காலிக பேருந்து நிலையங்கள் மற்றும் 4 இடத்தில் உதிரி பேருந்து நிலையங்கள் என மொத்தம் 16 இடங்களில் மாவட்ட நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 2600 பேருந்துகளை கொண்டு 7000 நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | தற்காலிக பேருந்து நிலையத்தின் பெயர் | மார்க்கம் |
|---|---|---|
| 1 | ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திண்டிவனம் (செல்லும் சாலை) | சென்னை, புதுச்சேரி,செஞ்சி,மற்றும் திண்டிவனம் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 2 | அத்தியந்தல் (செங்கம் சாலை) | செங்கம், திருப்பத்தூர், சேலம், ஓசூர்,மற்றும் பெங்களூர் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 3 | சுபிக்சா கார்டன்(செங்கம் சாலை) | கோவை,திருப்பூர், ஈரோடு, மேட்டுப்பாளையம் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 4 | அண்ணா நுழைவு வாயில் (வேலூர் சாலை) | வேலூர், ஆரணி, செய்யாறு, மற்றும் ஆற்காடு செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 5 | SRGDS பள்ளி (அவலூர்பேட்டை புறவழிச்சாலை அருகில்) | சேத்பட், வந்தவாசி மற்றும் காஞ்சிபுரம் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 6 | அபய மண்டபம் (காஞ்சி சாலை) | காஞ்சி,காரப்பட்டு, புதுப்பாளையம் மற்றும் மேல்சோழங்குப்பம் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 7 | வேட்டவலம் தற்காலிக பேருந்து நிலையம் (வேட்டவலம் ரோடு புறவழிச்சாலை அருகில்) | விழுப்புரம் மற்றும் வேட்டவலம் செல்லும் பேருந்துகள் மட்டும், |
| 8 | அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி எதிரில்( திருக்கோவிலூர் சாலை) | திருக்கோயிலூர்,பண்ரூட்டி,கடலூர்,சிதம்பரம்,உளுந்தூர்பேட்டை, விருத்தாசலம் மற்றும் நெய்வேலி செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 9 | மகரிசி வித்திய மந்திர் பள்ளி வளாகம்( திருக்கோவிலூர் சாலை) | கும்பகோணம்,மன்னார்குடி,தஞ்சாவூர்,மயிலாடுதுறை,நாகப்பட்டினம், வேளாங்கன்னி மற்றும் காரைக்கால் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 10 | அன்பு நகர்( திருக்கோவிலூர் சாலை) | திருச்சி, மதுரை, திண்டுக்கல்,மற்றும் திருநெல்வேலி செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 11 | மணலூர்பேட்டை (அவுட்டர் ரிங் ரோடு) | மணலூர்பேட்டை வழியாக திருக்கோவிலூர் செல்லும் பேருந்துகள் மட்டும் |
| 12 | நல்லவன்பாளையம் (தண்டராம்பட்டு சாலை | தானிப்பாடி, கள்ளக்குறிச்சி செல்லும் பேருந்துகள் மட்டும் |

| | உதிரி பேருந்து நிலையங்கள் | |
|---|---|---|
| 1 | ஆறுமுகனார் நகர்(திண்டிவனம் சாலை) | சென்னை மார்க்கம் |
| 2 | லயோலோ பள்ளி (செங்கம் சாலை) | செங்கம், சேலம் மார்க்கம் |
| 3 | தேனிமலை கிளை (தண்டராம்பட்டு சாலை) | கள்ளக்குறிச்சி மார்க்கம் |
| 4 | நல்லவன்பாளையம் (தண்டராம்பட்டு சாலை) | திருமலை நகர் எதிரில் |

இதனை பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அறியும் வகையில் செய்தித்தாள்களில் பிரசுரிக்கவும், மற்றும் தொலைக்காட்சிகள் மூலமும் அறிவிப்பு செய்யுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.